‘திராவிடத்தை வெல்ல எவராலும் முடியாது’ என்ற நிலையை உருவாக்குவோம்!

# வரும் தேர்தலில் மீண்டும் தி.மு.க. கூட்டணி வெல்ல உழைப்போம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மார்ச் 19-

திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நம் அறிவு ஆசான் தலைவர் தந்தை பெரியாரை 95 ஆண்டுகாலம் வாழ வைத்தும், அதன் பின் தனது நலிவடைந்த உடல்நலத்தையும் பொருட்படுத்தாது, தொடர் தூய தொண்டறத்தால், நம் இயக்கமான திராவிடர் கழகத்தின் தலைமையேற்று, 4 ஆண்டுகாலம் தந்தை பெரியார் விட்டுச் சென்ற பணிகளை - அவர்கள் போட்டுத் தந்த பாதையில், இம்மியளவும் நகராமல், அய்யாவைப் போலவே தனது சொத்துகளையும், முன்பே ‘சுகங்களை’யும் விட்ட அய்யாவின் அணுக்கத் தொண்டராகவும், பாதுகாத்த காவல் செவிலியராகவும், கடமையாற்றும் பெரியார் தொண்டராகவும் தொடர்ந்து - எவ்வித சபலங்களுக்கும் ஆளாகாமல், நெருக்கடி காலம் என்ற ஓர் இருண்ட காலத்தினையும் எதிர்கொண்டு, நின்று, வென்று காட்டிய நம் தலைவர் அன்னை, தன் தோள்கள்மீது சுமந்த இயக்கப் பொறுப்புகள், நிறுவனங்களின் பொறுப்புகள் போன்ற பல பொறுப்புகளை பெரியாரின் வாழ்நாள் மாணவனான இந்த எளியவனைச் சுமக்கச் சொல்லி, நம்பிக்கையுடன் விட்டுச் சென்றார்!

ஆம்! இந்தக் “குருவி”த் தலையில், அந்தப் பனங்காய்களைச் சுமக்கச் செய்துவிட்டார்; என்றாலும், இந்தக் குருவி, தந்தை பெரியார் என்ற பலம் பொருந்திய போர்ப் படைத் தலைவனின் தோள் மீது அல்லவா அமர்ந்துள்ளது. எனவே, அதற்கு எப்படி “பாரம்” ஆகும்? என்ற தன்னம்பிக்கையோடு, தளர் நடையின்றி, வீறுநடை போட வைத்தீர்கள் இயக்கக் கருஞ்சட்டைக் கடமை வீரர்களான நீங்கள் அனைவரும்!

சிக்கல்களும், சவால்களும் படமெடுத்தாடி, பயமுறுத்தி, பயணப் பாதையைக் கடினமாக்கின.

என்றாலும், ‘பெரியார் தந்த புத்தி’யுடன் எதிர்கொண்டு நின்று, வென்று வருகிறோம் மக்கள் தம் பேராதரவுடன்!

தந்தை பெரியார் அவர்களது அரிய அனுபவ அறிவுரைகளில் ஒன்று, “எவனொருவன் சுயநலமின்றி, ஆசாபாசங்களுக்கு அடிமையாகாமல், இலட்சியங்களுக்காகப் போராடுகிறானோ, அவன் இறுதியில்

**வெற்றி பெற்றே தீருவான்”**
**என்ற மூதுரையாகும்!**
**அதன்வழி நிற்கிறேன்!**
**நிற்கின்றோம், அனைவரும்!**

அய்யா அன்னையாரின் காலத்தில், கழகத்தினாலும் அய்யாவினாலும் விளம்பரமும், பதவிப் பொறுப்புகளும் பெற்றவர்கள் சிலரால், வருமான வரித்துறை ஆயுதம் திட்டமிட்டே ஏவப்பட்டது. ‘தந்தை பெரியார் இருக்கும் வரை தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும், அவரது முடிவுக்குப் பின்னால் எல்லாம் முடிந்துவிடும்’ என்ற திட்டத்துடன் இயங்கி, அய்யா காலத்தில், அய்யா தொடங்கிய பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தை அறக்கட்டளையாக அங்கீகரிக்க மறுத்ததோடு, 15 லட்சம் ரூபாய் அபராதம் என்றெல்லாம் போட்டு, அன்னையார் தலைமைப் பொறுப்புக்கு வந்த பின், ரூ.60 லட்சத்திற்கு வரி மேல் வரி போட்டு, அன்னையாருக்குப் பிறகு நான் பொறுப்பேற்ற (1978) காலகட்டத்தில், ரூ.80 லட்சம்வரை வரி என்று சொல்லி, நிறுவனத்தையே அழிக்கப் பெரு முயற்சிகள் - வழக்குக்குமேல் வழக்குகள் எல்லாம் வந்தபோதும், தக்க வகையில், தக்க சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகள், மூத்த வழக்குரைஞர் வாதுரைகள் மூலம் வென்று, 80 லட்சம் ரூபாய் வரியைத் தள்ளுபடி செய்ய வைத்தோம். இது சட்டப்படி ஓர் அறக்கட்டளையே என்ற அங்கீகாரம் பெற்று, முக்கியமான முதல் களத்தில் வென்று, நமது இயக்கம் வெறும் மணல் குவியல் அல்ல; கற்பாறை என்பதை, கொள்கை எதிரிகளும் விளங்கும்படிச் செய்தோம்.

இது ஒரு தனி மனிதச் சாதனை அல்ல; பல்வேறு சட்ட அறிஞர்களின் ஆலோசனை, அறிவுரைகள்மூலம் கிடைத்த “மெகா பரிசு!”

ஜஸ்டிஸ் வேணுகோபால், உத்தம் ரெட்டி என்ற வருமான வரித் துறை வழக்கு வல்லுநர் போன்றோர், ஓய்வு பெற்ற பிறகு, இறுதிவரை நமக்குக் கிடைத்த மதியுரைஞர் அய்யா எஸ்.இராஜரத்தினம் போன்ற மூதறிஞர்களின் பேருதவி, பெரும் அறிவுரைமூலம், முறைப்படி, குற்றங்குறையின்றி, ஆளுமையுடன் சீரிய பாதையில் பழுதின்றி அப்பணி தொடர ஆவன செய்து காப்பாற்றி வருகிறோம்.

கல்வி நிறுவனங்கள் பலவும் நாகம்மையார் குழந்தைகள் இல்லம் ‘ஆல்போல தழைத்து, அருகுபோல்’ வேரோடி, சிறப்பான அர்ப்பணிப்பான ஊழியத் தோழர்களின் ஒருங்கிணைப்போடு, ஒத்துழைப்போடு மிகச் சிறப்புடன் நடைபெறுகிறது.

அய்யாவின் சுயமரியாதை இயக்கத்தின் பொன்விழாவினைத் (50 ஆம் ஆண்டு) தஞ்சையில், அன்னையாரின் தலைமையில் நடத்தினோம். சில ஆண்டுகளுக்கு முன் - சுயமரியாதை முதல் மாகாண மாநாடு நடந்த செங்கற்பட்டு மண்ணிலே, 80 ஆம் ஆண்டு விழாவை அன்றைய முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் நடத்தினோம். சுயமரியாதை இயக்கத்தின் 100 ஆம் ஆண்டு நிறைவு மாநாட்டிற்குத் ‘திராவிட மாடல்’ முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பேருரை மிகச் சிறப்பான வரலாறு படைத்தது!

### 48 ஆண்டுகாலப் பயணம்:

1978 முதல் 2026 ஆம் ஆண்டுவரை - கடந்த 48 ஆண்டு கால இயக்க, இலட்சியப் பயணம் - பல தளங்களில், களங்களில் எப்படியெல்லாம் நடந்தது என்பதற்கான ஒரு பருந்துப் பார்வை இதோ:

அய்யாவையும், அன்னையாரையும் இழந்து நின்ற திராவிடர் கழகத்தின் கருஞ்சட்டைத் தோழர்களைக் கட்டுக்கோப்புடன் வழிநடத்தி, அய்யாவும், அம்மாவும் விட்டுச் சென்ற பணிகளை, அவர்கள் போட்டுத் தந்த பாதையில் செய்து முடிக்க உறுதியேற்றுச் செயலாற்றத் தொடங்கினோம் - தொடர்கிறோம்.

இயக்கத்தின் செயல்பாட்டை நிறுத்தவும், இடையூறு செய்யவும் எத்தனையோ முயற்சிகள் நடந்தபோதும், அவற்றைப் புறங்காண வைத்து, வெற்றி வாகை சூடி, எப்போதும் களத்தில் நிற்கும் போராட்ட இயக்கமாகவே கழகத்தைப் பெரியார் தொண்டர்களின் பேராதரவுடன் நிலைநிறுத்தியிருக்கிறோம்.

காலத்தின் தேவைக்கேற்ப திராவிடர் கழகத்தில் மகளிரணி, இளைஞரணி, திராவிடர் தொழிலாளர் கழகப் பேரவை, பெரியார் சமூகக் காப்பு அணி, திராவிட மகளிர் பாசறை, வழக்குரைஞரணி, தகவல் தொழில்நுட்பக் குழு போன்ற புதிய அணிகளைத் தோற்றுவித்து, அவரவர்க்கான செயல் திட்டங்களை வழங்கி, துறைதோறும் இயக்கப் பணிகளை வலுப்படுத்தியிருக்கிறோம்.

கழகத்தின் மூத்த பொறுப்பாளர்கள் வழிகாட்ட, இளைய தலைமுறை செயல்படும் வகையில் 1982 முதலே ஒவ்வொரு கட்டத்திலும் இளைஞர்களைப் பொறுப்புக்குக் கொண்டுவந்து பயிற்றுவித்து, இயக்கத்தை இளமைப் பொலிவுடன் இயங்கும் தன்மையில் வைத்திருத்துள்ளோம். பெரியார் பிஞ்சுகள் முதல் நூற்றாண்டு கடந்த ‘இளைஞர்கள்’ வரை மாநாட்டில் சந்திக்கும் உறவு இயக்கம் வேறு எது?

### தமிழர் இன, மொழி, பண்பாட்டுக் காப்பு:

சுயமரியாதை இயக்கத்தின் செயல்பாட்டுக் களமான தமிழ்நாட்டின் உரிமைக்கு எந்தக் குறைவு நேர்ந்தாலும் தந்தை பெரியார் காலம் தொட்டே அவ் வுரிமைகளை மீட்கும் போராட்டம் தொடர்ந்து நடைபெறுவதுண்டு. 1937 இல் தொடங்கிய ஹிந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், 40 ஆண்டுகள் கடந்த பின்னும் 1980-களிலும் நிகழ்ந்தது இன்றும் தொடர்கிறது! எல்லா கட்டங்களில் ஹிந்தி சமஸ்கிருதத் திணிப்புக்கு எதிரான கருத்துக் களம், பிரச்சாரக் களம், போராட்டக் களம் ஆகியவற்றில் முன்னின்று, வழக்குகள், சிறைகளைக் காணும் இயக்கமாக நாம் தொடர்ந்து செயலாற்றி வருகிறோம். பெரியார் கொடுத்த தார்ச் சட்டி இன்னும் நம் கைகளில் பயன்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது.

காவிரி நதிநீர் பிரச்சினைக்குச் சரியான தீர்வை முன்மொழிந்தது நாம் தான். நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரியது முதல், அது நிறை வேறுவதற்கான போராட்டங்கள் வரை, இன்று நிலைநாட்டப்பட்டிருக்கும் உரிமைக்குக் கருஞ்சட்டைகள் பாதை அமைத்தன.

தொப்புள்கொடி உறவுகளான ஈழத் தமிழர்களின் உரிமையும், உயிர்களும் பறிக்கப்பட்டு, இலங்கையில் இனப் படுகொலை நிகழ்ந்தபோது, எதனைவிடவும் நம் இனம் காக்கும் பணி முக்கியம் என்ற நோக்கில், தொடர்ந்து எல்லா வகையான அறப் போராட்டங்களிலும், பிரச்சாரத்திலும் உறுதியாகவும், தளராமலும் நின்ற நிற்கின்ற இயக்கமாகவும், இறுதிவரை களத்தில் நின்ற போராளிகளைத் தொடக்கத்திலேயே சரியாக அடையாளங்கண்டு ஆதரித்த இயக்கமாகவும் நம் கடமையை ஆற்றினோம். அதனால், இயக்கத்திற்கு எத்தனை இடர்கள் வந்தபோதும், சட்டரீதியாக அவற்றை எதிர்கொண்டு, அறப் பணியைத் தொடர்ந்தோம்.

தமிழுக்குச் செம்மொழித் தகுதி, தமிழ் எழுத்துகளில் திணிப்பு திரிப்பு முயற்சிகளைத் தடுத்தல், தை முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டுக்கான போராட்டங்கள், தமிழுக்கும், தமிழருக்கும் தீங்கு நேரவிருந்த சமயங்களில் எல்லாம் தலைகொடுத்துத் தடுத்து நிறுத்துதல், தமிழர் பண்பாட்டு விழாக்களை மீட்டமைத்தல், ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்புகளுக்கெதிரான தொடர் செயல்பாடுகள் போன்ற எண்களால் கணக்கிட முடியாதவை; திறத்தால் இன்றும் நாளையும் அனுபவிக்கப்படுபவை.

### பெரியார் உலகமயம்:

அறிவாசான் பெரியாரின் சிந்தனைகள் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியவையல்ல; அவற்றை மொழி, மாநில, தேச எல்லை கடந்து உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும் என்னும் முனைப்பில், அய்ரோப்பா, அமெரிக்கா, ஆசியாவின் பிற நாடுகள், ஆப்பிரிக்கா என 5 கண்டங்களில் அடித்தளமிட்டிருக்கிறோம்.

மேற்கில் கனடா முதல் கிழக்கில் ஜப்பான் வரை, வடக்கில் ரஷ்யா தொடங்கி தெற்கில் ஆஸ்திரேலியா வரை பெரியாரின் குரல் ஒலிக்கிறது. பெரியாரின் தேவை உணரப்படுகிறது.

பெரியாரின் சுயமரியாதைக் கருத்துகளை விவாதிக்கும் நான்கு பன்னாட்டு மாநாடுகள் மூன்று கண்டங்களில் நடத்தப்பட்டுள்ளன.

உலக மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பில் (IHEU) திராவிடர் கழகம் ஓர் அமைப்பாக இணைக்கப்பட்டது (6.7.1994). ‘மக்கள் இயக்கமாகச் செயல்படும் உலகின் மாபெரும் நாத்திக இயக்கம் - திராவிடர் கழகம்’ என அக் கூட்டமைப்பின் தலைவர்களே வந்து பார்த்து வியந்து பாராட்டியுள்ளனர்.

நமது முயற்சியினால் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பானியம், ஹிந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒடியா, பஞ்சாபி, வங்காளம், மராத்தி உள்ளிட்ட பல மொழிகளிலும், அண்மைக்காலத்தில் ‘திராவிட மாடல்’ அரசின் முன்னெடுப்பால் கூடுதலாகப் பல மொழிகளிலுமாக மொத்தம் 21 மொழிகளுக்கும் மேலாகப் பெரியாரின் சுயமரியாதை எழுத்துகள் ‘திராவிட மாடல்’ அரசால் வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் உலகாளுவார் பெரியார்!

தமிழ்நாட்டில் உள்ள சமூக நீதிச் சிந்தனையாளர்கள், இந்தியாவின் பிற மாநிலங்களைச் சேர்ந்த சமூகப் புரட்சி யாளர்களின் இயக்கங்களுடன் இணைந்து, அத் தலைவர்களின் கொள்கைகளை, சிறப்புகளைத் தமிழ்நாட்டிலும், தந்தை பெரியாரின் சிறப்புகளை வடபுலத்திலும் உணர வைத்து, மதவாத எதிர்ப்பில் - சமூகநீதித் தளத்தில் இந்தியாவின் நம்பிக்கை அடையாளமாகத் தந்தை பெரியாரை எல்லா இடங்களிலும் சேர்த்திருக்கிறோம்.

### பெரியார் கொள்கை பரப்பும் ஊடகங்கள்:

‘விடுதலை’ நாளேட்டை, வார ஏடாகத் திருச்சி யிலிருந்தோ, ஈரோட்டிலிருந்தோ நடத்திடலாமா என்று யோசிக்கும் அளவுக்குப் போய்விட்டேன்’ என்று மனம் வருந்திய சூழலில், எம்மை அழைத்து ‘விடுதலை’யின் பொறுப்பை ஏற்கக் கட்டளையிட்டார் நம் தலைவர் தந்தை பெரியார். ‘பெரியார் பணியே எம் வாழ்நாள் பணி’ என்று அதனை ஏற்று, 64 ஆண்டுகளாக அதன் ஆசிரியர் பணியைத் தொடர்ந்து வரும் இடர்களையும் எதிர்கொண்டு, ஒரு நாளும் இடைவிடாமல் செய்து வருகிறோம்.

நான்கு பக்கங்கள் இன்று எட்டு பக்கங்கள்; அதிலும் இரண்டு வண்ணப் பக்கங்கள்!

சென்னைப் பதிப்புடன் திருச்சியில் மற்றுமோர் அச்சுப் பதிப்பு; தவிரவும் உலகெங்கும் செல்லும் இணையப் பதிப்பு என மூன்று பதிப்புகள்.

தமிழ் நாளேடுகளில் முதல் இணைய ஏடு (Website), முதல் மின்னிதழ் (EPaper), ஒருங்குறியை (Unicode) அமல்படுத்திய முதல் ஏடு, பல லட்சக்கணக்கில் படவடிவக் கோப்புகளை (PDF) இலவசமாகப் பரப்பும் ஒரே ஏடு, பி.டி.எப்.பிலிருந்தே இணையப் பக்கத்திற்குச் செல்லும் வசதி (Link PDF) என பிரச்சாரப் பணிக்கு முன்னுரிமை!

தந்தை பெரியார் தொடங்கிய ‘உண்மை’ ஏட்டையும், ‘The Modern Rationalist’ ஆங்கில ஏட்டையும், பொன்விழாக்களையும் கடந்து தொடர்ந்து நடத்தி வருவதுடன், ‘பெரியார் பிஞ்சு’ என்னும் குழந்தைகளுக்கான ஏட்டைத் தொடங்கி வெள்ளிவிழாவையும் கடந்து அதனையும் நடத்தி வருவதும் நமது இடைவிடாத தொடர் ஓட்டத்தின் மைல்கற்கள்!

புதிய ஊடகங்களின் வரவுக்கு ஈடுகொடுக்க ஒவ்வொரு காலகட்டத்திலும் அதற்குத் தேவையான வகையில் தொலைக்காட்சிகளில் “பெரியார் நேரம்”, நெடுங்காலமாகச் செயல்படும் தமிழின் மூத்த யூடியூப் சேனலாக “பெரியார் வலைக்காட்சி”, இணையதளங்களின் வழியே “பெரியார் பண்பலை” ஆகியவை உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட இணையதளங்கள்.

கொள்கைப் பூர்வமாகச் சமூகநீதியை முன்னிறுத்தும் உலகின் முதல் ஓடிடி(OTT)யாக “பெரியார் விஷன்”.

ஆயிரத்தைத் தொடும் புத்தக வெளியீடுகள் அவற்றைக் கொண்டு சேர்க்க நாடெங்கும் புத்தகக் கடைகள் பெரியார் புத்தக ஊர்திகள் புத்தகக் கண்காட்சிகள்!

### அரசியல் தளத்தில்...

வாக்கு அரசியலில் நாம் நேரடியாக ஈடுபடாவிட்டாலும், யார் தமிழ்நாட்டை ஆள வேண்டும், யார் ஆளக் கூடாது என்பதைச் சரியாக முடிவெடுக்கவும், மக்களுக்குச் சரியாக அடையாளம் காட்டவும் கூடிய அமைப்பாகத் திராவிடர் கழகம் தொடர்ந்து கடமையாற்றுகிறது - உரியோரை அரசேற்க வைக்கிறது.

சமூகநீதி, மதச்சார்பின்மை, பாசிச எதிர்ப்பு, ஜனநாயக உரிமைகள் காப்பு, மாநில உரிமை என பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி, தேர்தல்களில் திராவிடர் கழகம் முடிவெடுக்கிறது. தமிழ்நாட்டில் இவை அனைத்துக்கும் எதிரான பாரதிய ஜனதா ஆதரவுக் கூட்டணி எதுவும் வந்துவிடக் கூடாது என்னும் நோக்கில் தொடர்ந்து செயல்பட்டுவருவது திராவிடர் கழகத்தின் தனித்தன்மை!

‘வழிகாட்டும் இடமாகப் பெரியார் திடல்’திகழ்கிறது!

இதற்காகத் திராவிடர் கழகம், ஒத்த கருத்துள்ள பல்வேறு இயக்கங்களையும் ஓரணியில் திரட்டி, உரியோர் தலைமையில் அரசியல் களத்தில் நிற்கச் செய்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மாண்புமிகு மானமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்துச் சொல்வதுபோல், ‘வழிகாட்டும் இடமாகப் பெரியார் திடல்’ திகழ்கிறது.

தமிழ்நாட்டுக்கும், சமூகநீதிக்கும் எந்தப் பிரச்சினை என்றாலும் பனிப் பாறையின் முனையைக் கண்டு, அதன் ஆழம் வரை ஆய்ந்து, ஆபத்தை முன்கணித்துக் கப்பலைச் செலுத்தும் மீகானைப் போல், (கப்பல் தலைவர்) நொடிப் பொழுதும் அயராது, அனைத்துக் கட்சிக் கூட்டங்களின் மூலம் செயல்பாடுகளை முடுக்கிவிடும் பணியைக் கழகம் தவறாது ஆற்றுகிறது. அதன் முக்கியத்துவம் கருதி அனைத்து இயக்கங்களும் நம்மோடு இணைந்து செயலாற்ற முன்வருகிறார்கள் என்பது தாய்க்கழகமாம் திராவிடர் கழகத்திற்குக் கிடைத்திருக்கும் வெற்றி தானே!

திராவிடர் கழகம் உருவாக்கும் இந்த ஒருங்கிணைப்பு இந்திய அளவில் முன்மாதிரியாகத் திகழ்கிறது அல்லவா!

இப்படி நாம் கடந்த பாதைகளும், பெற்ற வெற்றிகளும் ஏராளம்! இன்னும் நாம் முழுமை அடையவில்லை - இது ஒரு சிறு அளவே!

“தேர்தல் பணிகள் முடிந்த பிறகுதான் நமது தீவிரக் கொள்கைப் பிரச்சாரம் பிரவாகமாக நாடெங்கும், உலகெங்கும் பாய்ந்திட, “தீவிரப் பிரச்சாரத் திட்டம்” (பகுத்தறிவு, ஜாதி - தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கை தகர்த்தல், மகளிர் உரிமை காத்தல், நமது மக்களின் அன்றாட வாழ்வுரிமைப் பிரச்சினைகள் - சுற்றுச்சூழல் பாதுகாப்பு இவற்றை முன்னிலைப்படுத்தி, தொய்வின்றி தொடர் பிரச்சாரத் திட்டங்கள்) நாமும், கழகப் பரப்புரை களத் தோழர்களோடு நடத்தியும், தேவைப்படும் அறப்போர்களை அவ்வப்போது தொடரவும்,

இளைஞர் எழுச்சிக் களம்,
மகளிர் உரிமைக் காப்புப் பணி,

வேளாண் மக்களின் உரிமைகளைமுன்னிறுத்தி, பண்பாட்டுப் படையெடுப்புகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல் போன்ற பணிகளை, தொடர் பணிகளாய், அடைமழையாய் நடத்திடும் திட்டம் தொடரச் செய்வோம்!

இயங்கிக் கொண்டே இருப்பதால்தான், அது இயக்கம்!

மறவாதீர், கடமைகளைத் துறவாதீர்!

இராணுவப் பணியல்லவா, நம் பணி!

சமூகம், பொருளியல், அரசியல் என நம் மக்களின் உரிமைப் போரில், நின்று வென்று காட்டவேண்டிய தளங்களும், களங்களும் ஏராளம் பாக்கி இருக்கின்றன!

எப்போதும் நாம், இன எதிரிகள் - கொள்கை எதிரிகளின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு ஏமாந்து போகிறவர்கள் அல்லர்; மாறாக, எதிரிகளே ஏமாந்து போகும் வண்ணம், சுயநலமற்ற உழைப்பாலும், பிடிப்புள்ள களப் பணியாலும், தியாகம் வழியும் தொண்டறத்தாலும் வருகின்ற 2026 தேர்தலில், 110 ஆண்டுகளுக்குமுன் பிறந்த நீதிக்கட்சி என்ற இயக்கம், பரிணாம வளர்ச்சி பெற்று, சுயமரியாதை இயக்கத்தையும் இணைத்துக் கொண்டு, ‘திராவிடர் கழக’மாகி, அதன் இன்றைய கொள்கை அரசியல் செயலுாக்கியான தி.மு.க. - ‘திராவிட மாடல்’ ஆட்சி, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இன்றைய ஒப்பிலா முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் ஆகிய நீட்சியைத் தொடர, நம் மூச்சினையும் அர்ப்பணிக்கத் தயார் என்றும் உறுதியேற்று, ‘தமிழ்நாட்டைத் தலைகுனிய விடாது’ - பெரியார் நாடான, திராவிட, சமூக நீதி மண்ணைக் காக்கும் ஆட்சியை மீண்டும் நிறுவி, சுயமரியாதை பொங்க பெரு வெற்றியை ஈட்டிடச் சூளுரைப்போம்!

‘திராவிடத்தை வெல்ல எவராலும் முடியாது’ - இதுவே நம் சூளுரை!

அனைவருக்கும் தலைதாழ்ந்த நன்றிகள்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள், தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மோடியின் குடுமி டிரம்பிடம்!

எதற்கெடுத்தாலும் கணக்குப் பார்க்க கூடாது. உழவன் கணக்குப் பார்த்தால் ஒரு படி நெல் கூட மிச்சப்படாது என்பதை உணர்ந்து தான் தி.மு.க. தலைவர் விட்டுக்கொடுத்துச் செல்கிறார்.

சில நாட்களுக்கு முன் கிரிக்கெட்டில் இந்திய அணி மற்ற அணிகளை சிதறி அடித்தது போல, தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி மற்ற கட்சிகளைச் சிதறடிக்கும்.

சிலிண்டர் காணாமல் போனதற்கு காரணம் அமெரிக்காவின் போர். நீங்கள் பா.ஜ.க.வை குறை சொல்லக்கூடாது என்கின்றனர் சிலர்.

வெளியுறவுக் கொள்கையில், மாநில அரசு தலையிடக்கூடாது. சிலிண்டர் வினியோகம் ஒன்றிய அரசைச் சார்ந்தது. போரை அறிந்து, சிலிண்டர் கேஸை நிரப்பி வைக்காதது யார் தவறு?

கேஸ் சிலிண்டரை ரூ. 390-லிருந்து 1,000 ரூபாய்க்கு ஏற்றியதற்கும் ட்ரம்ப்தான் காரணமா? மானியத்தை நிறுத்தியதும் ட்ரம்ப்தானா?

‘பெண்களைச் சூறையாடிவிட்டு அவர்களையே சமைத்துச் சாப்பிடும் கூட்டத்தில் மோடி மாட்டியதால் ட்ரம்ப் என்ன சொன்னாலும் மோடி தலையாட்டுகிறார்’ என சிலர் சொல்கிறார்கள். உன் குடுமி என்னிடம் என்பதுபோல. மோடியின் குடுமி ட்ரம்பிடம். அதற்காக நூறு கோடி இந்தியனும் கஷ்டப்பட வேண்டுமா?

நம் நாட்டு வணிகர்களின் பொருட்களுக்கு அமெரிக்க அரசு மூன்று சதவிகிதம் வரி விதித்ததை ட்ரம்ப் 18% ஆக உயர்த்துகிறார். ஆனால் அவர்களின் உற்பத்தியாளர். அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்தால் அதற்கு வரியே இல்லை. ‘நீ அரிசி கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன். ஊதி ஊதி சாப்பிடுவோம் என்கிற கதையாக அமெரிக்கா, மோடியை’ இந்தியரை அசிங்கப்படுத்துகிறது.

இதை அ.தி.மு.க. தோழமைகள் கண்டிக்கவில்லை. காரணம் தேர்தல் நேர கூட்டணி. ஆனால் பா.ஜ.க.வினருடன் தேர்தலில் கூட்டணி வைக்காத கொள்கை எதிரி த.வெ.க. ஏன் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டிற்கு ஒன்றிய அரசைக் கண்டிக்கவில்லை. என்ன பயம்? சுரண்டல் லாட்டரி வழக்கா? த.வெ.க. விஜய்க்கு பத்தாயிரத்தில் முடிக்கவேண்டிய டெல்லி பயணம், ஒரு கோடி செலவு செய்து தனி விமானத்தில் நீளுகிறது.

இந்திய வரலாற்றிலேயே 2011-2021 ல் அ.தி.மு.க. சம்பாதித்ததுதான் அதிக பணம் என்பார்கள். ஆனால் அந்தப் பணம்கூட, பா.ஜ.க. தரும் பணத்தோடு ஒப்பிட்டால், 2021-ல் வறட்சியாம். 2026 இல் கொட்டு கொட்டு என கொட்டுவார்களாம் அ.தி.மு.க.வினர் எனச் சொல்கிறார் உதயகுமார்.

இதிலிருந்து 2011-2021 வரை பத்தாண்டு காலம் சம்பாதித்தை விட 2026-ல் பா.ஜ.க. தந்திருக்கும் பணமே அதிகம் என உதயகுமார் சொல்லி உள்ளார்.

செத்தவன் கையில் கொத்துச் சாவியை கொடுத்தாலும் எழுந்து நடக்க முடியாது. தமிழர்களை பா.ஜ.க. எவ்வளவு மிரட்டினாலும், அ.தி.மு.க. கூட்டணிக்கு பணம் கொடுத்தாலும் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி டெபாசிட் பெறாது. தி.மு.க.வே 234 தொகுதிகளில் உறுதியாக 214-ல் வெற்றி பெறும்.

பா.ஜ.க. தன் தவறை உணர்ந்து கவர்னர் ரவியை மாற்றி விட்டது. ரவியைப் பார்த்தாலே தமிழ்நாடு அரசின் அடையாள கோபுரத்தை மாற்றியது. நீட் தீர்ப்பை எதிர்த்ததை எதிர்த்தது. மாநில அமைச்சரை நீக்குவதற்கு எனக்கு அதிகாரமிருக்கிறது என்று சொன்னது. தமிழ்நாடு அரசை தன் இஷ்டத்திற்கு ‘தமிழகம்’ என மாற்றி அடித்த அழைப்பிதழ் எல்லாம் நினைவுக்கு வரும் எனக்கருதி கடைக்கோடி மேற்கு வங்கத்திற்கு கவர்னர் ரவியை அனுப்பிவிட்டனர்.

த.வெ.க. மாவட்டச் செயலாளர்கள் கூட. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தவளை எவ்வளவு தண்ணீர் குடிச்சாலும் யானை ஆக முடியாது.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

நாம் என்னதான் செய்தாலும் திமுகவை வெல்ல முடியாது. வேண்டுமானால் அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியில் சேருவோம் என சொன்னார்களாம். தனியாக நின்றால் விளங்காது என த.வெ.க. மாவட்டச் செயலாளர்கள் கூறியுள்ளார்கள்.

ஆக த.வெ.க. நிர்வாகிகள் ‘தனியாக நிற்க முடியாத ஒன்று என ஒப்புக்கொண்டுவிட்டனர்.

தம்பித் துரை சொல்கிறார். தி.மு.க.வில் அ.தி.மு.க.வினர் தான் செயல்படுகின்றனறாம். தி.மு.க.வில் ஆட்கள் இல்லாமல் சேர்க்கிறார்களாம்.

ஜெயலலிதா எனும் கேப்டன் இறந்தபின், தங்களுக்குள் சண்டை போட்டு, கப்பலில் ஓட்டை விழுந்து விட்டது. ஓட்டைக் கப்பலில் இருந்து மூழ்காமல் நீச்சல் தெரிந்தவர்கள் விவரமானவர்கள், நேர்மையானவர்கள் தப்பித்து எதிரில் வந்த கப்பலில் ஏறிவிட்டனர். தப்பித்து ஏறிவந்த மாலுமிகளை மாற்று கப்பல் கேப்டன் தாயுள்ளத்தோடு ஏற்றுக் கொண்டார்.

வட இந்தியர்களுக்கு உணவு விடுதியில் வேலை கொடுத்ததால் தமிழர்களை ஒதுக்கவில்லை. வட இந்தியர் இல்லாவிட்டால் தமிழ்நாடு ஸ்தம்பிக்காது. ஆனால் சுறுசுறுப்பான. நேர்மையான தோழர்கள் மதிக்கப்படுவது போல.

அ.தி.மு.க.விலிருந்து வந்த திறமையானவர்களை தளபதி பயன்படுத்திக் கொள்வதில் பெருமை கொள்கிறார். இன்று ஏகடியம் பேசுபவர்களின் அடுத்து ஆண்டு முகவரி தி.மு.க. என்பதே சரி.



சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதி 61 ‘அ’ வட்ட பொருளாளர் வி.சுரேஷ் சகோதரன் வி.கண்ணன் (வயது 47) 16 ஆம் நினைவு நாளில் அமைச்சர் மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தி குடும்பத்திற்கு ஆறுதல் கூறினார். உடன் பகுதிச் செயலாளர் வி. சுதாகர், 61 அ வட்ட கழக நிர்வாகிகள் ரசூல், வெற்றி வீரன், ஜெயக்குமார், தமிழ்மணி, ரவிவர்மன், குள்ள கிருஷ்ணா, தங்க செல்வம், கோபி,கிருஷ்ணன், கே.ஜெயக்குமார், செல்லா என்கிற செல்வகுமார், தனசேகர் பாபு, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்கள்.

நே.சிற்றரசு — அன்பகம் கலை — தயாநிதிமாறன் — டாக்டர் நா.எழிலன் பங்கேற்பு!

# 113-வது ‘அ’ வட்டக் கழக நிர்வாகிகள் - BLA-2 ஆலோசனைக் கூட்டம்!

## வட்டச் செயலாளர் த.தேவராஜ் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 19-

ஆயிரம் விளக்கு பகுதி, 113-வது ‘அ’ வட்டக் கழகச் செயலாளர் த.தேவராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

23-04-2026ம் தேதி நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தல் வெற்றி பிரச்சாரம் மற்றும் நம் தலைவர் அவர்களின் ஐந்து ஆண்டுகள் சாதனைகளை சொல்லி வீடு வீடாக சென்று மக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு குறித்தும் நமது 113(அ) வட்ட கழகத்தின் சார்பில் வட்ட கழக அலுவலகம், தர்மாபுரம் மெயின் ரோட்டில் இன்று - 19.03.2026ம் தேதி மாலை 7.00 மணி அளவில் வட்ட அவைதலைவர் பி.குமரேசன் தலைமையில் வட்ட கழக செயலாளர் த. தேவராஜ் முன்னிலையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் வட்டகழக நிர்வாகிகள் மற்றும் BLA-2 ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுகொள்கிறேன்.

இக்கூட்டத்தில் பகுதி கழக செயலாளர் மா.பா. அன்புதுரை, பகுதி துணை செயலாளர் மு.வெங்கடேசன், பாக பொறுப்பாளர்கள் பி.ஆர்.திருமலை பொன்னுரங்கம், சி.பாட்ஷாபாபு ஆகியோர் ஆலோசனைகள் வழங்குவதால் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.